*Registered No. M. 408.*

உ

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு.

## திங்கட்கொருமுறைதோன்றித்திகழ்வது.

# THE THIRUNAVUKARASU.

## PUBLISHED ONCE IN A MONTH.

பத்திராதிபர்—தி. பா. சிவராமபிள்ளை.

புத்தகம் ௨] திருநெல்வேலி: விசுவாவசு௵ வைகாசி௴ ௰௯-உ; 1905-ம்௵ ஜூன்௴ 1-உ [இலக்கம் ௫.

"அகர முதல வெழுத்தெலா மாதி, பகவன் முதற்றே யுலகு."

உ

திருச்சிற்றம்பலம்.

"ஏனவெண் கொம்பொடு மெழிறிகழ் மத்தமு மிள வரவும், கூனல்வெண் பிறைதவழ் சடையினர் கொல் புலித் தோலுடையர், ஆனினி லைந்துகந் தாடுவர் பாடுவ ரருமறைகள், தேனில்வண் டமர்பொழிற் றிருநெல் வேலி யுறை செல்வர்தாமே."

"நஞ்சணிகண்ட னெந்தை மடவாட னோடு விடை யேறு நங்கள் பரமன், றுஞ்சிருள் வன்னிகொன்றை மதி சூடி வந்தெ னுளமேபுகுந்த வதனால், வெஞ்சின வவுண ரோடு முருமிடியு மின்னு மிகையான பூதமவையு, மஞ் சிடு நல்லநல்ல வவைநல்லநல்ல வடியாரவர்க்கு மிகவே."

திருச்சிற்றம்பலம்.

---

## சிறுத்தொண்டர்.

---

இந்நாயனாரது சரித்திரத்தை வாசித்தேன்; அதிற் பின்வரும் ஆசங்கைகள் எனக்கு நிகழ்கின்றன:—

1. சமயமும் நல்லொழுக்கமும் என்னும் இரண்டனுள் எது எதனோடு பொருத்தமுடையதா யிருத்தல் வேண்டும்?

2. நல்லொழுக்கமில்லாத சமயம் மேன்மையுடையதாகுமா?; அல்லது நன்மை தருமா?

3. கொலை, களவு முதலியன சமயத்தாரானும் சாதியாரானும் விலக்கப்பட்டனவோ? அன்றோ?

4. பத்திமார்க்கம் விதிமார்க்கத்தைக் கடப்பதாயின் அதற்கு நல்லொழுக்கமென்பது கவனிக்கப்படற்பாலதொன்றன்றோ? பத்திக்கும் நல்லொழுக்கத்திற்கும் சம்பந்தமுண்டா, இல்லையா?

5. "அரனடிக் கன்பர்செய்யும் பாவமும் அறமதாகும், பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்" என்ற வாக்கியத்தின் உண்மை எனக்கு ஒன்றுமே தெரியவில்லை.—

6. அரனடிக்கன்பர் பாவம் செய்வார்களோ? செய்தாலும் அது புண்ணியமாவதெவ்வாறு? "பரனடிக்கன்பிலாதார் புண்ணியம் செய்தால் அதற்குப்பயனில்லாமற் போவதெப்படி? அவர் மனம் நல்லியல்புடையதாதலும், அவராற் பிறர் சுகமடைதலும் ஆகிய இவைதாமும் இல்லாமற் போகுமா?

7. பத்தி தன்னியல்பில் மென்மை யுடையதோ, அன்றோ? மேன்மையுடைய பத்தியினாலே மெல்வினை விளையுமா, வல்வினை விளையுமா? அன்றியும் கடவுட்பத்திக்கு மென்மையொன்றே அமையாதோ? அம் மென்மையால் வல்வினையும் விளையுமோ?

8. பிள்ளைக்கறி வேண்டுவோர் கடவுட் பத்தியுடையராதல் எவ்வாறு அநுமிக்கப்படும்? அவர்க்கு அது தருவோரும் கடவுட்பத்தியுடையராதல் எப்படி? கடவுட் பத்தியும் அளவுக்கு மேற்பட்டால் தீதாய் முடியும் போலும், அது வெறி விளைக்குமா?

9. அன்றியும் கடவுட்பத்திக்குக் கடவுளை நோக்கி உயிர்கள்மேல் இரக்கமிராதோ? உயிர்கள்மேல் இரக்கமில்லாத உயிர்க்குக் கடவுள் அருள் செய்வதும் உண்டோ? அருள் செய்வாராயின் அக்கடவுளின் அருள் எப்படிப்பட்டதாதல் வேண்டும்?

10. ஒன்றுமறியாத குழந்தையை அறுத்துக் கறி சமைக்கத் துணிந்த மனம் எந்தப்பலனை உத்தேசித்து அவ்வாறு துணிந்தது? கடவுளைச் சந்தோஷிப்பிக்கலாமென்னும் நினைவால் அவ்வாறு துணிந்ததா? உள்ளபடி கடவுள் அச்செயலிற் சந்தோஷமடைவாரா?

11. பிறரறியாதபடி பிள்ளையையறுத்தலொன்றே, அது குற்றமாதலை அவ்வாறறுத்தோரும் அறிவர் என்பதை உணர்த்தாதா? அங்ஙனம் அறுக்கும்பொழுது அக்குழந்தைக்குத் துன்பமிருந்திராதா? அறிந்துசெய்த குற்றத்திற்குப் பயனில்லையா? இச்செய்கை சிவபுண்ணியமாகுமா? இச்செய்கை செய்வித்தும், செய்ய இடங்கொடுத்தும்தான் கடவுள் இச்செயல் செய்வோரது அடிமைத்திறத்தை விளக்கவேண்டுமோ? அவ்வடிமைத் திறம் இத்

---

கையொப்பவிகிதம்:— உள்ளூர், வெளியூராருக்குத் தபாற்கூலி யுட்பட முன்பணமாக ஒரு வருஷத்திற்கு ரூ. 1. மோர்மேன் சிங்கப்பூருக்கு ரூ. 2. தனிப்பிரதி 1-க்கு அணா 2.

துணைச் சந்தேகங்களை விளக்குமாயின், அது பிறர்க்கு விளங்கிலென், விளங்காதொழியிலென்?

12. இச்செயல்செய்தோர் சரித்திரம் சாதாரணபத்தர்களால், அல்லது மெல்வினைசெய்தற்குரிய அன்புடையோரால் பின்பற்றக்கூடாததாயின், அவர்க்கு இச்சரித்திரத்தால் யாது பயன்?

சிறுத்தொண்டர் சரித்திரத்தில்,— இவையும் இவைபோல்வனவுமாகிய ஆசங்கைகட்குச் சமாதானங் கூறி, இத் "திருநாவுக்கர"சின் மூலமாய் விவேகிகளாகிய அன்பர்கள் வெளியிட்டுத் தருவார்களாயின் எனக்கும் என்போலிகட்கும் மிக்க உபகாரமாயிருக்கும்.

உண்மை உசாவுவோன்.

---

உ

சிவமயம்.

# திருநாவுக்கரசு.

திருச்சிற்றம்பலம்.

"என்பட்டிக் கட்டிய விந்தப்பைக் குரம்பையை—
விங்கிட்டுச் சுட்டபி னெங்குத்தைக்குச்செலுமிது, முன்
பிட்டுச் சுட்டிவ ருந்திக் கெத்திக்கென—மொய்ம்புற்றுக்
கற்றறி வின்றிக்கெட் டுச்சில, வன்பட்டிப் பிட்டர்க
ளென்புற்றுப் புத்தியை—வஞ்சித்துக் கத்திவி மூந்தெச்சுத்
தட்டுவ, ரன்பர்க்குப் பற்றிலர் சென்றர்ச்சிக் கின்றில
ரந்தல்குக் கிக்கிளை சிந்தித்தப் பித்தரோ."

திருச்சிற்றம்பலம்.

## கடவுள்வழிபாடு.

மனிதன், உடலும் உயிரும் ஆகிய இரண்டினாலும் ஆக்கப்பட்டிருக்கின்றான். உடல் அறிவில்லாதது. உயிர் அறிவுள்ளது. அறிவில்லாத உடலோடு அறிவுள்ள உயிருக்கு உளதாகிய சம்பந்தம் எவ்வாறுண்டாயிற்றோ, அதை அறிய முடியவில்லை. ஆயினும் உலகத்தில், ஒருவன் மற்றொருவனோடு நண்புகொள்வானாயின், அவ்விருவர்க்கும் பொதுவாகிய குணம், அவ்விருவரிடத்தும் காணப்படும்; அதுபோல, உடலுக்கும் உயிருக்கும் உளதாகிய சம்பந்தத்திற்குக் காரணம், அவ்விரண்டினிடத்தும் உளதாகியதோர் பொதுக்குணமேயாதல் வேண்டும்; அது அறியாமையென்னும் குணமென்றூகிக்கலாம். இங்கே அறியாமை யென்றது தானாயறியாமையை. உடல் தானாகவும் அறியாது, அறிவித்தாலும் அறியாது. உயிர் தானாக அறியாது, அறிவித்தால் அறியும். உயிர் உடலோடு கூடிய பின்பே, உடலை அறிகின்றது; ஆதலால் உயிர் உடலை அறிதற்கு அவ்வுடலும் காரணம் ஆம்; ஆயினும் உறக்கத்திலறியாமையால் அது நேரே காரணமாகாது; உயிரினது அறிதற் சத்தியைப் புடைபெயர்த்துவதற்குத் துணைக்காரணமேயாம். உயிர் உடலோடுறவுகொள்ளுதற்கு முன், அவ்வுடலின் சுபாவத்தைத் தானாக அறிந்து, உறவுகொண்டதாகத் தெரியவில்லை. ஆதலால், இவ்வுறவு உயிரின் பொருட்டே உளதாயினும், இவ்வுறவிற்குக் காரணம் அவ்வுயிரினிடத்துளதாயினும், இவ்வுறவை உண்டாக்கியது உயிரல்லவென் றூகித்துக்கொள்ளலாம். இவ்வுறவை உண்டாக்கியது உடலுமல்ல உயிருமல்லவென்றால், இதற்குக்காரணம், இவ்விரண்டையும்விட வேறொன்றாகவன்றோ இருத்தல்வேண்டும்? அதுயாது? அது இவ்வுடலுமாகாது, உயிரும் ஆகாது; இவ்விரண்டுமாகாதென்றால், அது எப்படியிருக்கும்? இவ்வுயிர்க்கு இவ்வுடலாகும் என்று முன்னமே அறிந்து, அவ்வுயிரோடு அவ்வுடலை உறவுகொளுத்தும் அப்பொருளைத் தானாக ஒன்றுமறியவியலாத உயிர் எப்படி அறியும்? அறியாது; அவ்வுறவு கொளுத்தும் பொருள் யாதோ, அஃதறிவித்தாலேஅறியும்! அவ்வாறறியும்அறிதற்சத்தியைப் புடைபெயர்த்தும்பொருட்டே அவ்வுயிர்க்கு அவ்வுடலை அப்பொருள் கொடுக்குமென்றால், அதுவே தன்னையும் அவ்வுயிர்க்கு அறிவிக்கும். அவ்வுயிரும் அப்பொருள் அறிவித்தாலறியுமேயன்றித் தன்னொத்த உயிர்ப்பொருளறிவித்தாலும் உள்ளபடியறியாது!! இங்ஙனம் எப்பொருள் தன்னைத்தானாகவே தந்தால் அவ்வுயிர் பெறுகின்றதோ, அப்பொருளைத்தான் உலகம் கடவுட்பொருளென்றேத்தெ தெடுக்கும் போலும்!!!

உடல் தானாகவும் அறியாது, அறிவித்தாலும் அறியாது; அதற் கறிவிப்பான் கடவுள் எனவே, கடவுள் தானா யறிந்தாங்கறியும்பொருள் என்பது தானே பெறப்படும். இவ் வறிவுவகையாற் கடவுட் பொருளோ டுயிர்க்குளதாகிய சம்பந்தத்தை யறிதல் அரியவற்றுளெல்லா மரிதாயிருக்கின்றது.

கடவுட் பொருள் தன்னை உயிர்க்குத் தருதலும், இருவகைப்படுகின்றது; எப்படி? நேரே தருதலும், இன்னொன்றன் வழியாகத் தருதலும் என. அப்படியே உயிரும் அதனை நேராகவும் இன்னொன்றன் வழியாகவும் பெறுகின்றது. இதனால், உயிர் கடவுட்பொருளை நேரே உள்ளபடி தெரிந்து சரியாகவும், மற்றொன்றன் வழியாய்த், தெரிந்துதெரியாமற் சரித்தப்பாகவும், தெரியாமையா

ற்றப்பேயாகவும் வழிபடுகின்றது. தெரிந்தும், தெரிந்துதெரியாமலும், தெரியாமலும் வழிபடும் வழிபாடுகளனைத்தும் கடவுட்பொருளையே நோக்கி நிற்றலாற் கடவுள்வழிபாடுகளேயாம். தெரிதல், தெரியாமை, தெரிந்து தெரியாமை ஆகிய எல்லாம் அவ்வவ்வுயிரின் தகுதி தகுதியின்மைகளின் நிலைவேறுபாடுகட்குத் தக்கபடியிருக்கும். அறிந்தோர் அவ்வுயிர்களின் நிலைவேறுபாடுகள்பற்றி அவற்றை இகழார்.

உயிர்க்குத், தன்னையும் அதனையும் பிறவற்றையும் உள்ளபடி அறிவிக்கத் தொடங்கிய கடவுட்பொருள், அவற்றை அதற் கெத்தனைவகையால் என்னதன்மையா யறிவிக்குமோ அதனை நாம் அறியோம்! கடவுட்பொருள் அவ்வவ்வுயிரின் தகுதிக்கேற்பத் தன்னை அறிவிக்கும்பொழுது அவ்வவ்வுயிர் அவ்வத்தகுதியி னின்றுகொண் டெவ்வெவ்விதமாயறிந்து, எவ்வெவ்விதமாய் வழிபட்டு, எவ்வெவ்விதமாயின்புறுமோ அவற்றையெல்லாம் தனித்தனி ஒருவகையால் அவ்வவ்வுயிரும் உள்ளபடி அக்கடவுட்பொருளுமே அறியும்; நம்மால் ஒருவகையால் நம்மளவிலன்றி ஒருநாளும் அவற்றுள் ஒன்றையும் ஒருங்கே உள்ளபடி அறியமுடியாது!! ஆதலால் அவைபற்றி நன்காராய்ந்தறிந்துகூறி முடிப்போமென்றல் வாய்ப்பகட்டேயாம் "ஆட்பாலவர்க்கருள்செய்யும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான்புகி லளவில்லை கிளக்க வேண்டா" என்னும் தமிழ்வேதம், இஃதெல்லாமிங்ஙனமாகவும் கடவுள்வழிபாடுகள்பற்றி உலகம் பலவாறு வாதாடுகின்றது; அதுவும் திருவருட்குறிப்பேபோலும்!!!

திருச்சிற்றம்பலம்.

"நன்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடனடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே."

திருச்சிற்றம்பலம்.

---

## சத்விஷய பரிசீலனம்.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன், பெற்றலும் பிறந்தே னினிப் பிறவாத தன்மைவந் தெய்தினேன், கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க் கறையூரிற் பாண்டிக்கொடுமுடி, நற்றவாவுனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சி வாயவே"

திருச்சிற்றம்பலம்.

---

எனது சிற்றறிவுக்குத் திருவருள் புலப்படுத்திய வளவில், இத் தேவாரத்தால்,—

(1) வேறொன்றையும் பற்றுதலின்றி ஒருவனுடைய மனம் சிவபிரானது சீபாதங்களையே பற்றுமாயின், அதுவே பெறற்கரும் பேறாம் என்பதூஉம்,

(2) அது பெற்றோனே உண்மையில் இவ்வுலகத்துயிர்வாழ்கின்றோனவன் என்பதூஉம்,

(3) அவனே மேற்பிறவாநிலை இப்பொழுதே வாய்த்தோனவன் என்பதூஉம்,

(4) இவ்வுண்மை கற்றவர்க்கே விளங்குமென்பதூஉம்,

(5) இப்பேறு பெறுதலே நற்றவம் ஆவான் செல்லுமென்பதூஉம்,

(6) ஆதலால், அச் சீபாதத்தை மறவற்க வென்பதூஉம்,

(7) பண்டை வாசனைமிகுதியால் மறக்கநேரினும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை விதிப்படி உச்சரித்தலாகிய உபாய வித்தையால் அவன் அம்மறவி நீங்கி முன்னைத் தவநிலையின்கண் உறுதி எய்தப்பெறும் என்பதூஉம், பிறவும் பெறப்படுமேபோலும்! இங்ஙனம் கூறினமை கற்றவர்க்கெவ்வாறு தோற்றுமோ அறியேன். ஆயினும் குற்றமுண்டாயின், அடியேனை மன்னித்தருளி, உண்மைகூறித் திருத்துவர்.

சங்கரன்.

---

உ

## மெய்கண்ட சிவமயம்.

திருநெல்வேலி, குரோதிஞு மாசிமீ திருநாவுக்கரசு, புஸ்தகம் இரண்டனுள், பரமசிவனுக்கு உருவமுதலிய மூன்று முண்மையன்மை சாதிப்பதுபோன்றெழுந்த "எம்மிறைவர் திருமேனி" என்பதனை மறுக்குமுகத்தான், அவை, அவற்குண்மையை வலியுறுத்துவது:—

பரமசிவனுக் குருவமுதலிய மூன்றும் வடிவமேயாம். அவை, அவற்குளவோ, இலவோ, என்னுமையப்பாட்டின்கண், இலவாமென்பது பிறர் கூறும்பக்கம். உளவாமென்பது மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு. அவன், அவ்வுருவமுதலிய பொருள்கள் மூன்றுமல்லன். அவை அவனானே முத்தொழிற் படுதலின். அங்ஙனம் அம் முத்தொழிற்படாத தான், அவை தம்முள் யாதுமாதல் செய்யாமையின், அவை, அவற்கிலவாமென விங்ஙனம் பெறப்பட்ட வழி கூறுதும்.

அருவம், அருவுருவம், உருவமென்னு மூன்றுமவற்கு வடிவமேயாம். முத்தொழில்செய்யு முதல்வனுக்கு வடிவமின்றி யமையாமையின். குலாலன்போலுமென்னு மனுமானத்தான், அவனுக்கம் மூவடிவுடைமை துணியப்பட்டதாயிற்று. "மூன்றுஞ் சொன்ன வொருவனுக்குளவாமே", என்னுஞ் சுருதிபற்றி யது தெற்றெனவறிக. இவ்வாறு தேர்ந்துணர வல்லார்க்கு, பரமசிவன் உருவமுதலிய மூன்றுமுளனல்ல னென்றல் பொருந்தாதென்பது தெளியக்கிடந்த விம் முதல்வாக்கியம்போல, அதனுட்போந்த வேனை வாக்கியங்களுஞ் சிறிது மியையாதென்பது தாவிபுலாக நியாயம்பற்றி யறிந்துகொள்ளுக,

"சிவஞானதேசிகன் றிருவடி வாழ்க,
பவமாயபந்தம் பறைந்திடவுயிர்க்கே.

சிதம்பரப்பரதேசி,

"திருமான் சிவஞான மெய்கண்ட தேசிகர்
உரைமுகத்துக்கேட்கு மாணுக்கன்"

செப்பறைவாசி, இலங்கைத்தேசி.

உ

## "இணக்கமறிந் திணங்கு"

என்னும் திருவாக்கையும், "வணங்கத் தலைவைத்
து வளர்கழல்வாய் வாழ்த்தலைவைத், திணங்கத்தன் சீரடி
யார் கூட்டமும்வைத் தெம்பெருமான், அணங்கொடா
ணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற, குணங்கூரப் பாடி
நாம் பூவல்லி கொய்யாமோ." என்னும் திருவாசகத்தை
யும் ஒப்பு நோக்கினால் இணங்குதற்குரிய இணக்கமின்ன
தென்றறியலாம். இது பற்றியே "அடியாருறவு மரன்
பூசை நேசமு மன்புமன்றிப், படிமீது வேறு பயனுள
தோ" என்றும் பிறவாற்றானும் பெரியார் பலருங் கூறி
யருளினர். அடியாருறவைத் தவிர வேறுறவாற் பயனில்
லை என்பதன் நோக்கென்ன? மற்றையுறவெல்லாம் சுரு
ங்கக்கூறிற் பிறவிக்கே காரணமாம். அடியாருறவோ அன்
னதன்று, பிறவி நீக்கத்திற்கே காரணமாம். பிறவி நீக்
கத்தைத் தவிர இப்பிறவியாற் பெறப்படும் பயன் வேறொ
ன்றுமில்லையென்னும் உண்மையுணர வல்லார்க்கு அடி
யாருறவைத் தவிர வேறுறவு உறவாகவே தோற்றுத
லில்லை; பகையாகவும் தோற்றும். என்னை? அவ்வுறவு
தமக்குப் பழம்பகையாகிய பிறவியைத் தருதலின் என்க.
அங்ஙனமன்றி ஏனையுறவையும் உறவெனக் கொள்வரா
யின் அது தம் கொள்கையோ டிணங்காமையின் அவர்
இணக்கமறியாதவரே யாவர். அவரதிணக்கமு மிணக்க
மன்றாம். இணக்கமாவது இறைவனது கழற்கீழ் வணக்
கமேயாம். தலைமை பற்றித் தலையும் வாயும் கூறினும் வ
ணக்கத்தைப் புலப்படுத்தும் பிற உறுப்புகளும் பிற செய்
கைகளும் உடன்கொள்ளப்படும். "வணங்கத் தலைவைத்"
தமை முதலியன போலவே, "இணங்கத்தன் சீரடியார்
கூட்டமும் வைத்" தருளிய வள்ளன்மைகூறவே, இண
ங்குதற்குரிய அடியார் கூட்டம் எப்பொழுதும் உண்டெ
ன்பதாயிற்று. "இணக்கமறிந்து" என்றருளினமையால்
அவ்விணக்கமுள்ள அடியாரை அறிந்துகொள்ளுதலும்,
"இணங்கு" என்றமையால், அவ்வாறவரை யறிந்துகொ
ள்ளினும் அவரோடிணங்கும் பேறுபெறுதல் அதனினு
மரிதென்பதூஉம் குறிப்பாற் பெறப்படும். படவே இண
ங்குதற்குரிய மனம் பெறினும் "இணக்கமறிந்திணங்கு"
தல் அரிதென்றவாறாயிற்று. அம்மட்டோ? அங்ஙன ம
றிந் திணங்காவிடின் அதனால் நேரும் துன்பங்கள் சால
வும் பல என்பதாம். இன்னும் "இணங்கு" என்னும் அத
னானே, இணக்கமறிந்திணங்கினும் அவ்விணக்க முள்ள
அடியார்க்கு எவை இணக்கமாவனவோ அவற்றை அறிந்
து அவற்றையே செய்து, அவர்க்கிணங்க ஒழுகுதல் மிக
வும் அரிய செயலாம் என்பதூஉம், அதுவே செயத்தகும்
என்பதூஉம் பெறப்படும் போலும். உலகர்க்கும் அவர் தம்
உலகநடையில் இணக்கமறிந் திணங்குதல் கூறவேண்
டா. அவர் இணங்கியபிற் பிரிவுண்மையின் அப்பிரிவு
"இணங்கு" என்பதனால் விலக்கப்பட்டது. இங்ஙனமன்
றித் தம்மோடு பிணங்குவாருடனே இணங்குதல் இணக்
கமன்றென்றவாறும், இவற்றையெல்லாமறிந்துமோ, அறி
யாமலேயோ, அடியர்வேடந்தரித்தோர்பலர், உலகரோடி
ணங்கிஅவர்க்கேற்ப ஒழுகித் தம்மொழுக்கிறந்தும், உலகர்
அடியரோடிணங்கி, அவர்க்கேற்ப ஒழுகுவார் போல் தம்
மொழுக்கிறந் தவரொழுக்கிறப்பித்தும், இங்ஙனம் அங்கு
மன்றி இங்குமன்றிக் "கிடங்கினுட்பட்ட கராவனை"யரா
யிருந்தொழிகின்றார்கள். இவர் கூட்டம் எவர்க்குமிணக்க
மன்றாம். இக்கூட்டமே இக்காலத்தே, எங்கும் பல்கி வரு
கின்றது. அக்காலத்தும் மற்றெக்காலத்தும் இஃதுண்டெ
ன்பதும் இவ்விதிச்சூத்திரங் கொண்டே ஊகித் துணரப்ப
டும்போலும். ஆதலால் அறிவுடையோர், திருவருள்துணை
யாகத் தமக்கெஃதிணக்கமாவதோ, அஃதறிந்தே இணங்
குவர். "தெருளார் கூட்டம் காட்டாயேற் செத்தேபோ
னாற் சிரியாரோ?" என்பது மணிவாசகமன்றோ?.

ந. நா.

---

உ

## இறப்பச்சம்.

'புற்றில் வாளரவுமஞ்சேன்'; 'வன்புலால் வேலு
மஞ்சேன்'; 'பிணியெலாம் வரினுமஞ்சேன்'; 'வானுலா
மெரியுமஞ்சேன்'; 'வரைபுரண்டிடினுமஞ்சேன்'; 'தறிசெ
றிகளிறுமஞ்சேன்'; 'தழல்விழியுழுவையஞ்சேன்'; 'மஞ்சு
லாமுருமுமஞ்சேன்'; 'மன்னரோடுறவுமஞ்சேன்'; 'கோ
ணிலாவாளியஞ்சேன்'; 'கூற்றுவன் சீற்றமஞ்சேன்' எ
னக்குறிப்பாகவும், 'பிறப்பினோடிறப்புமஞ்சேன்' எனவெ
ளிப்படையாகவும் பிறவாற்றானும் ஸ்ரீமத் மாணிக்கவாசக
சுவாமிகள் தமக்கிறப்பச்சமில்லையென்று அருளிச்செய்தி
ருப்பவும் அதற்குமாறாக, "யானேதும்பிறப்பஞ்சேன்; இற
ப்பதனுக்கென் கடவேன்" என்றஞ்சுவரா? "உறங்குவது
போலுஞ் சாக்காடுறங்கி, விழிப்பது போலும் பிறப்" பெ
ன்றாற், சாக்காட்டின்பொருட் டஞ்சக்கடவதென்னை?
"நடுநீங்காமலே நமக்கிட்டபடி யென்றென்றிருப்" போர்
க்கும், "எங்கெழிலென்ஞாயி றெமக்"கென் றிருப்போர்
க்கும் இவ்வச்ச மெழுமென்றுநினைக்கவுமுடியுமா? அல்ல
தூஉம் அவரஞ்சினால், இப்பிறவி தப்பினாலெப்பிறவி
வாய்க்குமோ, எது வருமோ?" என்றஞ்சுகின்றாரா? கட
வுள் தம்மைக் கைவிடமாட்டார் என "நம்பாதவரா? கட
வுளாற் "பிறப்போடிறப்பென்னுஞ் சித்த விகாரக்கலக்கந்
தெளிவி" க்கப் பெறாதவரா? என்றின்னோரன்ன வினாக்க
ளெல்லாமெழுமன்றே? ஆகலான், "யானேதும்
பிறப்பஞ்சேன்" என்றதற்கேற்ப "இறப்பதனுக்கென்
கடவேன்" என்பதற்கு "தக்கதசமதி தாயொடுதான்படுந்
துக்கசாகரத் துயரிடை"ப்பட்டுப் "பிறப்பதற்கே அஞ்சே
னாயின் இறப்பதற் கென்கடவேன், அதுவேகடவேன்"
என்று பொருள்கொள்ளலாகாதா? இதனுண்மை எப்படி?

உண்மை உசாவுவோன்.

---

உ

## சிராத்தமா, ஊர்விருந்தா?

சிரத்தையாற் செய்யப்படுதலிற் சிராத்தமாம். அது
சிறப்பு வகையாற் "றென்புலத்தார்" பொருட்டுச் செய்ய
ப்படும் தலையாய அறத்தை உணர்த்தும். அது வேதநூல்
சைவநூல் என்னும் இரண்டனுள் யாதானு மொன்றுபற்

றி, ஆண்டு விதித்தவாறே வழுவாது செய்யப்படும். இங்ஙனமாகவும் இத் திருநெல்வேலியிலே சைவசிராத்தஞ் செய்தற்குரியோர் பலர் அதனியல் பொருசிறிது முணராது தத்தமக்குத்தோன்றியவாறெல்லாம் அதனைச் செய்துபோதருகின்றனர். அவருள்ளும் பலர் அதனை ஊர் விருந்துபோலக்கொண்டு நடத்துகின்றார்கள்;—சிராத்தபோஜனத்திற் கருகரல்லாத பலரையும் விருந்தருந்துவிக்கின்றார்கள். இது சிராத்தமா, ஊர்விருந்தா? இவர்கள் இன்ன சமயத்தில் இன்னது செய்யத்தகும் என்னும் ஆசாரமறியாது ஒன்றைச்செய்தல், குளிக்கப்போய்ச் சேறு பூசுதலேயாமென் றுணர்ந்துகொள்ளக்கடவர்.

நனமை நாடுவோன்.

---

உ

## ஓர்பழங்கேள்வி:—

ஒருதுழந்தை கிணற்றில் விழுந்தது;
என்று வைத்துக்கொள்க,
அதை,

(1) அக்கிணற்றண்டை நின்ற ஓர் பொலீஸ் சேவகன் கண்டெடுத்தான்;

(2) யாதானுமோர் பொருள் இவ்வாறு அபாயத்திலகப்பட்டுக்கொண்டால், அதனையெடுத்துத் தரும்படி பழக்கப்பட்டதோர் நாய் கண்டெடுத்தது;

(3) அபாயகரமான அக்காட்சியைக் கண்டு சகிக்கமுடியாத ஒருவன் அசனல்தனக்கு நேர்ந்த அத்துன்பம் அல்லது மனவேதனையைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டாற் போய் எடுத்தான்;

(4) அக்குழந்தையின் பின், அதற்கு வாரிசாயுள்ளவனுக்குப் பகைவனாகிய ஒருவன் அக்குழந்தை இறந்தால், அதன் சொத்துக்களெல்லாம் தன் பகைவனுக்குப் போய்ச்சேருமே யென்னும் பொறாமையாற்போய் எடுத்தான்; இவர்களுள் யாருக்கு அக்குழந்தையைக் காப்பாற்றியதா லுண்டாகிய பெருமையைத் தரலாம்? எப்படி?

உண்மை உசாவுவோன்.

---

"தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவா
பெய்யெனப் பெய்யு மழை". ள்

என்னும் திருவள்ளுவருக்குப் பெண்டிர் கணவனைத்தொழுதலேயன்றித் தெய்வத்தைத் தொழலாகாதென்ற கருத்துண்டா?

உண்மை உசாவுவோன்.

---

"நால்வர் போனவழியே நாமும் போகவேண்டும்"

என்று சொல்லிக்கொள்ளுகின்றார்களே; "நால்வர்" என்பது யாரை? நால்வர் போனவழியேதான் நாமும் போகவேண்டுமோ? நமக்கென்று ஓர்வழியில்லையா? நால்வரும் ஒரேவழியாய்த்தான் போவார்களா? வெவ்வேறு வழியாய்ப் போகமாட்டார்களா? ஒரோவொரு இடத்தைக்குறித்துத்தான் போவார்களா? வெவ்வேறிடத்தைக் குறித்துப் போகமாட்டார்களா? ஓரிடத்திற்கே வெவ்வேறுவழி யிருந்தாலும் ஒருவழியைப்போல மற்றொருவழியுமிருக்கவேண்டுவ தவசியமா? அவ்வழிகளில் மற்ற வழிகளைவிட ஒரு நல்லவழியிராதா? அதிற்போனாற் போதாதா? அதிலேயே நாமும்போகலாகாதா? நாலுபேரும்போனவழி எப்போதும் நல்லவழியாய்த்தானிருக்கு மென்பது கட்டாயமா? நால்வரென்றது சைவசமயாசாரியர்கள் நால்வரைத்தானா? அல்லது சனகாதியரையா? அல்லது வேறே நால்வரையா? அல்லது பல்லரையுமா? இவ்வாக்கியத்தின் உண்மையெப்படி?

உண்மை உசாவுவோன்,

---

## சிவத்துரோகம்

தகப்பன் சொத்து பிள்ளைக்குப் பாத்தியப்பட்டதா இல்லையா? அதைப்பிள்ளை உபயோகப்படுத்துவது தகப்பனுக்குச் சம்மதமாகத்தானே யிருக்கும்? ஸ்ரீ சிவபெருமான் எல்லார்க்கும் தகப்பன்தானே? கோயிற்சொத்துமாத்திரம் சிவசொத்தென்றும், அதை யெடுத்துக்கொள்வது மாத்திரம் சிவத்துரோகம் என்றும் சொல்லுகிறார்களே, அதென்ன? கோயிற்சொத்தைத் தவிர மற்றச் சொத்துக்களெல்லாம் சிவசொத்தல்லவோ? அந்தச் சொத்துக்களை எடுப்பதென்றால் சிவபிரானுக்கு அவ்வளவாகக்கோபம்,வராதோ? அல்லது கோபமே வராதோ? கோயிற்சொத்து சிவசொத்தானால், சிவன் பரமபிதாவானால், அவன்பிள்ளைகள் நாமானால், அவன் சொத்து நமக்குத்தானே பாத்தியப்படுமே? நமக்குப் பாத்தியப்பட்ட சொத்தை நாம் எடுத்துச்சாப்பிட்டால் அதுகுற்றமா? இந்தப் பாத்தியதையின் பேரில் தான் சில கனவான்கள் கோயிற்சொத்திற் பாத்தியதை கொண்டாடுகிறார்கள்போலத் தோன்றுகிறது! இதைத் தெரிந்துகொள்ளப் புண்ணியஞ்செய்யாத பாவிகள்தான் இவர்களைப்பாவிகளென்று நினைக்கிறார்கள், ஐயோபாவம்!!

கோயிற்றீவட்டி.

---

## முக்காணி.

முக்காணி, பசுக்கன்று அல்லது பசுவின் கழுத்திற் போடும் ஒருவகைத்தளை. அது கன்றை அல்லது பசுவை அங்கே இங்கே தலையசைக்கவொட்டாமல் தடுக்கும். முக்காணி திருச்செந்தூர்ப் பக்கத்திலுள்ள ஒரூருமாம். திருச்செந்தூரிலுள்ள திரிசுதந்தரத்தார்களையும் "முக்காணி" யென்று சொல்வதுண்டு. அவர்கள் விஷயத்திலே ஒருவன் தலையிட்டுக்கொள்வானானால் அவன் அவர்கட்கு அடிமையாகப் போய்விடுவதேயல்லாமல் மீண்டுபோவது கஷ்டமாம்; அதாவது அவனிடத்தில் அவ்வளவு அன்பும் உபசாரமும் காட்டுவார்களாம்; ஆகையால் அவர்களுக்கு "முக்காணி" என்னும் பேர் மிகவும் பொருத்தம் என்று சிலர் பேசிக்கொள்கிறார்கள்.

சுரோதா.

---

## விக்கிரஹாராதனகண்டனவெதிரோகம்.

(தொடர்ச்சி)

எப்பொருளிலும் கடவுள் வியாபித்திருக்க விக்கிரஹத்தை மந்திரத்தினால் ஸ்தாபனம் செய்வானேன் என்

ற வினாவுக்குச் சரியான விடை யளித்திருப்பதாகத் தோன்றவில்லை. அதற்கு விடை யின்னதுதானென்றும் தெளிவாய்த் தெரியவுமில்லை. பக்குவமில்லாத சாதாரண ஜனங்கள் மனங்கவியும்பொருட்டு சிற்சில வேற்பாடுகள் செய்யவேண்டியதவசியமென்றும் மந்திர ஸ்தாபனம் சாதாரண ஜனங்கள் மனதைக் கவரும்படிசெய்யச் செய்த ஒருதந்திரமென்றும் பக்குவமடைந்த மகான்கள் மந்திரத்தினால் யாதொரு பிரயோசனமுமில்லை என்று அறிந்து விதிப்படியமைந்த விக்கிரஹங்களைக்கண்டவிடமெல்லாம் மனமுருகிக் கடவுளை வந்தித்து நிற்பாரொன்றுங் கருத்து விளங்கும்படி இவ்விடை யளித்திருப்பதாகத் தோன்றுகிறது. மந்திரத்தினாற் பிரயோசனம் இல்லையா? மந்திர ஸ்தாபனம் சாதாரண ஜனங்கள் மனதைக் கவியும்படி செய்ய ஏற்படுத்திய வொருதந்திரந்தானா? இதுநிற்க. ஏதோ விதிப்படி யமைந்த விக்கிரஹங்களையும் அத்தகைய விக்கிரஹ ஸ்வரூபத்தையும் கண்டவிடத்துமட்டும் மகான்களுங்கூட வந்தித்து நிற்கவேண்டியதென்னை? கடவுள் எவ்விடத்தும் எப்பொருளிலுமில்லையா? எந்தப்பொருளை வைத்தும் ஏன் பூசிக்கலாகாது? இவ்வித ஏற்பாடு கடவுள் சர்வ வியாபியாய் ஜீவாத்மாக்களை விட்டுத் தினையளவும் பிரியாதவராய் அந்தந்த ஆன்மாவின் பக்குவத்துக்குத் தக்கபடி பயனளிக்கக் காத்துக்கொண்டிருக்கிறவராயிருக்கிறார் என்கிற வுண்மையை மறக்கும்படி செய்கிறதல்லவா? சிலவிதிகளேற்படுத்தி அவ்விதிப்படி சில விக்கிரஹங்களை யமைத்தவ்விக்கிரஹங்களையும் சில மந்திரத்தினால் ஸ்தாபனம் செய்து அவ்விக்கிரஹ வாயிலாகக் கடவுளை வழிபடும்படி செய்வது சாதாரண ஜனங்கள் மனசைக் குன்றும்படிசெய்யுமென்றும் கடவுள் ஏதோ வோரிடத்திலோர்விக்கிரஹத்தினுளமைந்திருப்பது போலவும் மற்றவிடங்களில் அவர் இல்லாதது போலவும் அவர்களை நினைக்கும்படிசெய்ய வேதுமாயிருக்குமென்றும் இப்படிச்செய்யும்படியான தன்மை விக்கிரஹாராதனத்தால் உண்டாகுங் கெடுதல்களிலொன்று என்றும் விக்கிரஹாராதனத்தைக் கண்டனம் செய்கிறவர்கள் சொல்லுகிறார்கள். துண்டுப்பத்திரிகையிலுள்ள இந்த 5-வது வினாவுக்குப் பகர்ந்துள்ள விடை விக்கிரஹாராதன கண்டனத்துக்குத் தான் சார்பாயிருக்கிறதென்று தோன்றுகிறது. மகான்களுங்கூட விதிப்படியமைந்த விக்கிரஹங்களையும் அத்தகைய விக்கிரஹ ஸ்வரூபத்தையும் கண்டவிடத்து மட்டு மனமுருகி வந்தித்து நிற்கிறார்கள் என்றும் மகான்களல்லாத மற்ற சாதாரண ஜனங்கள் விதிப்படி யமைந்த விக்கிரஹங்களில்லாத விடத்தில் மட்டுமல்ல விதிப்படியமைந்தவிக்கிரஹங்களைக்கண்டாலுங்கூட அவ்விக்கிரஹங்கள் மந்திரங்களினால் ஸ்தாபனம் செய்யப்படாவிட்டால் அவர்கள் மனமுருகி வந்தித்து நிற்கிறதில்லையென்றும் அவர்கள் வந்தித்து நிற்க ஓரிடத்தில் மந்திரத்தினால் ஸ்தாபனஞ் செய்யப்பட்டதாயுள்ள விதிப்படியமைந்த ஓர் விக்கிரஹம் வேண்டுமெண்டுமென்று சொன்னால் கடவுள் மற்றவிடங்களில் வியாபித்திருக்கிறாரென்பதை அவர்கள் நினைக்கிறதில்லை அல்லது மறந்துவிடுகிறார்களென்று சொன்னதாகாதா? இவ்வித வியல்பினையுடைய மனிதர்கட்கு அவர்கள் மனது கவியும்படி ஓர் இடத்தில் ஓர் விக்கிரஹத்தை யமைத்து மந்திர ஸ்தாபனம் செய்து வைத்தால் அவ்வித ஏற்பாடு கடவுள் மற்ற இடத்திலும் வியாபித்திருக்கிறார் என்கிற உண்மையை முற்றிலும் மறக்கும்படி செய்யாதா? இது விக்கிரஹாராதன கண்டனத்துக்குச் சார்பாயிருக்கவில்லையா?.

அஷ்ட பந்தனஞ்செய்வது சக்கரவர்த்தி முதலியோர் பிரியமாய் வீற்றிருக்கும் பொருட்டு சிம்மாசனமுதலியவற்றை ரிப்பெயர் செய்வதையொப்ப மருந்தினாகிய பீடங்களை...விக்கிரஹங்கட்குப் பொருந்தியிருக்கும் பொருட்டென்று முதலில் சொல்லிவிட்டு அப்பால் அது வழிபடுவோர் பொருட்டேயன்றி கடவுள் பொருட்டன்று என்று சொல்லியிருப்பதின் கருத்து இன்னதென எனக்குப்புலப்படவில்லை. சிம்மாசனத்தை ரிப்பேர்செய்வது சக்கரவர்த்தியின் பொருட்டல்லவா? இவ்வெதிரேகத்திற் சொல்லியபடி அவர்கள் பிரியமாய் வீற்றிருக்கவல்லவா? அவர்கள் பிரியமாய் வீற்றிருக்க ரிப்பெயர் செய்வதையொப்ப அஷ்டபந்தனம் செய்வது என்று சொல்லி விட்டு கடவுள் பொருட்டன்று என்று சொல்வதின் கருத்தென்னை? யார்பொருட்டாயிருந்தாலுஞ் சரியே அஷ்டபந்தனம் செய்வது விக்கிரஹங்கள் பொருந்தியிருக்க வென்றும் நல்ல தினம்பார்த்து செய்வது நீடித்துப் பொருந்தியிருக்க வென்றும் ஏற்படுகின்றது. விக்கிரஹங்கள் பீடத்துடன் பொருந்தியிருக்கும்படி செய்கிற வஸ்துக்களை மந்திரம் சொல்லாமலும் நல்ல தினம் பாராமலும் உபயோகிக்கவேண்டிய விதமாய் உபயோகித்தால் விக்கிரஹங்கள் பொருந்தியிராவோ? ஐரோப்பாகண்டத்தில் மந்திரங்களினால் ஏதோ பிரயோஜனமிருந்ததாக நினைத்து நடந்த ஓர் காலத்தில் கத்தியினால் ஒரு மனுஷனுக்குக்காயமுண்டானால் காயமுண்டாக்கிய கத்தியில் சிலமந்திரஞ்சொல்லி ஓர் ஈரத்துணியைச் சுற்றி அக்கத்தியை ஓரிடத்தில் இரண்டு மூன்று தினம் வைத்திருந்து அப்பால் எடுத்துவிடுகிறது வழக்கம். அக்கத்தியிலுள்ள துணியை அவிழ்த்தெடுக்கிறவரை காயத்திலும் ஓர் ஈரத்துணியைச்சுற்றி கட்டிவைத்திருப்பது வழக்கம். இரண்டு மூன்று தினம் கழித்தவுடன் பார்த்தால் காயம் சௌக்கியமாயிருக்கும். மந்திர பலத்தினால் அவ் அவ்விதம் காயம் சௌக்கியமானதாக எண்ணியிருந்தார்கள். அப்பால் முன்னதைச் செய்யாமல் பின்னதைமட்டுஞ் செய்தபோதுங் காயம் சௌக்கியமாயிற்று. அதன்பின் காயஞ்சௌக்கியமானதற்குக் காரணங் காயத்தைச் சுற்றி ஈரத்துணியைக் கட்டினதும் அசைச் சில நாள் எடாதிருந்ததுந்தானென்று தெரிந்துகொண்டார்கள். இதுபோலவே நல்லநாட்பாராமலும் மந்திரஞ்சொல்லாமலும் பீடத்தில் விக்கிரஹங்கள் பொருந்தியிருக்கும்படி செய்கிற வஸ்துக்களை உபயோகப்படுத்திப் பார்த்தால் விக்கிரஹங்கள் பொருந்தாதிரா என்று நினைக்கிறேன். நல்ல தினத்தில் தீயிற் கைவைத்தால் அது சுடாதோ? கெட்ட தினத்திற் பாலைச்சாப்பிட்டால் அது தித்திப்பாயிராதோ? இயற்கை வஸ்துக்கள் அவைகள் உட்பட்டிருக்கிற விதிப்படி நல்லதினம் கெட்டதினமென்கிற கவனிப்பில்லாமல் தம்தொழிலைச் செய்யுமென்பது எனது துணிபு. கல் முதலியவற்றாற் செய்யப்பட்டுள்ள விக்கிரஹங்கள் அத்தகைய வஸ்துக்களால் செய்யப்பட்ட பீடங்களில் பொருந்தியிருக்கும்படி செய்யவேண்டுமானால் எந்த

இயற்கை வஸ்துக்கள் அவ்விதம் பொருந்தியிருக்கும்படி செய்யுமோ, அவைகளை சரியானபடி உபயோகப்படுத்தினால் பொருந்தியிருக்கவே செய்யும், அதற்கு நல்ல தினமாவது மந்திரமாவது அவசியமில்லையென்று நினைக்கிறேன். இதைச்சோதித்துப் பார்த்த லெளிது.

(இன்னும் வரும்)

பாளையங்கோட்டை 12-2-05. } பாளையங்கோட்டைஎன்னும் திருமங்கைமாநகர்வாசி.

---

உ

ஸ்ரீ சற்குருப்பியோநம:

## சித்திராதீனகர்த்தர் திருக்குருகூர் ஸ்ரீமத்ஞானசித்தசுவாமிகள்

புதுவையப்பதிக்கடுத்த

## ஸ்ரீ இரும்பை மாகாள க்ஷேத்திரத்தில்

நடாத்திய

## யாகதரிசனம்.

---

சிவநேசச் செல்வர்காள்!

நாளது விசுவாவசுவரு சித்திரைமீ 7-உ புதவாரம் மாலை நாலு மணிக்குப் புதுவையம்பதிக்கடுத்த ஒழிந்தியார்பட்டி என வழங்கி வருவதும், முன் வாமதேவ மகரிஷிக்குப் பிரத்தியக்ஷமானதும், ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகளால் திருப்பதிகம் அருளிச்செய்யப்பெற்றதுமாயுள்ள திருவாசிலி என்னுந் தலத்தில் இரதோற்சவத்திற்குச் சென்றிருந்த காலை, அன்று திருவிரும்பை மாகாளத்தில் யாகம் நடக்கிறதாகச் சிற்சில வந்தணர்களால் கேள்வியுற்று சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருக்கையில், நமது நண்பர் ஒருவர் அந்த யாக விளம்பரத்தைக் கொடுத்தார். வாசித்துப் பார்க்கவே திருக்குருகூர் ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள் நடாத்தும் ஸ்ரீ புவநாம்பிகை (கஅ-வது) யாகமெனத் தெரிந்தது. சில நாட்களுக்கு முன்னரே இப்பெருந்தகையார் ஞானம், யோகம், பக்தி, வைத்தியமாதிய நான்கு பாதங்களினும் அருளிச்செய்த பன்னூற்களைப் பார்த்திருப்பதுமன்றி, நம் நாட்டுப் பற்பல கௌரவமுள்ள பத்திரிகைகளாலும் இம் மஹானிடத்தில் அவ்வக் காலங்களினும் இயற்கையாக நடைபெற்று வரும் அற்புதங்களைப்பற்றியும் இவரால் நீண்டகாலமாய்ச் செய்யப்பெறும் யாகமோ தெய்வ உபாசகர்களாகிய ஒவ்வொரு மகரிஷிகளாலும் செய்யப்பெற்றதும் ஜீவகாருண்யத்தையே முதன்மையாகக் கொண்டதென்ன வேதசிவாகமங்கள் ஆங்காங்கு கோஷிப்பதுமாமென தெள்ளிதில் தெரிந்திருந்தும் பன்னாட்டு மேதாவிகளாலும் இவர் சரிதம் செவியினிப்பக் கேட்டிருந்ததேயன்றிப் பார்வையால் தரிசிக்கும் புண்ணியம் செய்திலோம். அன்று இத்தகைய பெரியோரால் செய்கின்ற யாகத்தையே தரிசிக்க நமக்கு உதவி புரிந்த நற்காலத்தை நாம் திரிகரணங்களுடன் சிலாகித்து உடனே நமது நண்பர்களுடன் அப்பதிக் கருகிலேயுள்ள இரும்பை மாகாளத தெல்லைக்குள் வரும்போதே விண்ணுலகமும் அதிரும்படியான பற்பல வாத்திய கோஷங்கள் முழங்கின.

திரள் திரளான ஜனங்களும் வந்துகொண்டிருந்தனர். பின்னர் ஸ்ரீமாகாளேசுவரர் திருக்கோபுரத்தருகே வந்து கூடினோம். ஆலயத்தின் திருவாயில் முதற்கொண்டு பிரகாரத்தில் அமைத்திருந்த கொட்டகைவரையினும் ஏராளமான புஷ்பத்தொங்கல்களாலும் மகரதோரணமுதலான மங்கலவிருதுகளானும் தீபவரிசைகளானுந் திவ்யாலங்காரம் செய்யப்பட்டிருந்தது. தரிசித்துப் பிரதக்ஷிணமாகவந்து பார்த்தபோது மூன்று ஆவரணங்களுடைத்தாய் நடுவிலே ஒரு பெரியகொட்டகையும் கண்டனம். அதன்மூலத்தானத்திலே கோடிசூரியப்பிரகாசமாய் ஸ்ரீ புவனாம்பிகை திரிசூலமும், சுற்றினும் பூரண கும்பங்களுமாக விளங்க ஆதிசைவப் பிராமணோத்தமர்களால் யதோத்தாபிஷேகங்களும் நடந்துகொண்டிருந்தன. அதற்கடுத்த மற்றோராவரணத்தே தென்முகமாக எழுந்தருளிய ஸ்ரீ பைரவேசர்க்குச் சுகந்தபரிமள திரவியங்கள் நிறைந்த செஞ்சந்தனத்தால் கவசமாசாத்தி மல்லிகை, சம்பங்கி செவ்வலரி முதலிய நானாவித மணங்கமழும் புஷ்பமாலிகைகளால் அலங்காரம் செய்திருந்தது. மூன்றாவதான யாகசாலையில் மந்திரபூர்வமாக ஹோமாக்நி வளர்த்துத் திருநீற்றொளி பிரகாசிக்க ஓர் கூர்மாசனத்தில் நமது சித்தபெருந்தகையார் எழுந்தருளியிருந்த அற்புதக் காட்சியைக் கண்டுகளித்த வியப்பை எத்தகைத்தென இயம்பவல்லேன். தெரிசித்தோர் மனதிற் சிறிது பிரியாது விளங்கும் அவ்வற்புதத் திருமேனி வள்ளலார் அம்பிகைபால் வைத்த அன்பின தரம அறிந்துரைக்குந் தரமோ! பின்பு ௰க-மணிக்கெல்லாம் ஸ்ரீ குயின்மொழியம்பாள் சமேதராய் விளங்குமாகாளேசுரர்க்கு அபிஷேகாதியனைத்துஞ் செய்வித்து திவ்யமங்களகரமாய் அலங்கரித்து முன்பு சோமாசிமாறநாயனார்க்கு அன்புகாட்டிய காட்சியை ஒவ்வொருவர்க்கும் நினைப்பூட்டியதாயிருந்த வற்புதத்தைச் சொல்லுந்தரமன்று. மறுநாள் காலை 12-மணிவரை நடந்தேறிய ஸ்ரீபரதேவதையாதிசமஸ்த தேவதைகளின் முக்கால தரிசனத்திற்கும் கண்ணிமை கொட்டாமல் ஜனங்கள்யாவரும் காத்துக்கொண்டிருந்தார்கள். பூர்ணாகுதிகொடுக்கும் சமயத்தில் புதுவை பிரம்ம ஸ்ரீ திருக்காமய்யரவர்கள் பாராயணஞ் செய்த திரிசதை படநத்தைக்கேட்ட எவர்க்குத்தாம் அம்பிகைபக்தி உண்டாகாதிருக்கும்? இவரோ நாற்பது ஐம்பது வருஷங்களாக நவராத்திரி முதலான காலங்கள் தோறும் அபரிமிதபிராம்மண சந்தர்ப்பணை சுமார் நூறுதடவைகளுக்கு மேலும் செய்தவர். அருமையான சிற்சில ஆந்திரகிரந்தங்களியற்றியவர்.

இத்தகைய வயோதிக வயதிலும் தமது தேக சிரமம் தோற்றாது சித்தசுவாமியின் சாயைபோல் குறிப்பின்வழி நின்றொழுகுவரேல் மற்றியார் தான் சித்தரைப்போற்றிப் புகழாதிரார்?

பூர்ணாகுதி முடிந்த பிறகு முதனாளில் அன்பர்கள் பலர் விரும்பியவண்ணம் அத்தலத்தி லெழுந்தருளிய எமது ஸ்ரீமது குயில் மொழியம்மை சமேதமாகாளேசுவர சுவாமிக்கு இயற்றிய பதிகமானது சமாணுதிகரகித தம்பதிகளுடைய ஸ்ரீ சந்நிதானத்தில் அரங்கேற்றப்பட்டது. அச்சமயம் தர்மகர்த்தர்களாகிய புதுவை மிஸ்டர் இரத்தினசெட்டியார், சொக்கலிங்க செட்டியார், சஞ்சீவிராயன் பேட்டை வேலாயுதசெட்டியார் முதலிய அநேக

கனதனவான்களும் கணக்கற்ற மஹா ஜனங்களுமாகக் கூடி இருந்தார்கள். அப்பொழுது அம்சிலி இரும்பை முதலிய தேவஸ்தானத்திற்கும் மற்ற க்ஷேத்திரங்கட்கும் தருமகருத்தாவும்: கலியுக கர்ணனென யாவராலும் கொண்டாடப்படுபவருமாகிய ஆலங்குப்பம் ஸ்ரீமான் வெங்கடசாமி நாயக்கரவர்கள் மஹாஜனங்களுடைய ஆரவாரத்தைத் தமது சம்பீரமான நோக்காலும் வார்த்தையாலும் அலையற்ற சமுத்திரம்போலாக்கி சித்தசுவாமிகள்மீது பலவித்வான்களியற்றிய பலபிரபந்தங்களை விநியோகித்தும் சித்த மூர்த்திகளை யாகசாலையில் எழுந்தருளச்செய்து வருணாச்சிரம தர்மங்களுக்கேற்பவந்திருந்த கனதனவான்கள் முதல் சகலமானபேர்களுக்கும் அறுசுவைஅன்னபானாதிகளைக் கனிந்த அன்புடனும்,ஊக்கத்துடனும், முயற்சியுடனும் உபசரித்து பரிமாறச்செய்தார். அன்றியும் ஒரு பக்கம் தாமே நின்று இஷ்ட ஜன சமுகங்களுக்கு மெத்தவும் சுடுகையாயிருப்பதையும் பார்ப்பவர் பிரமிக்கும் வண்ணம், தமது கரத்தாற் பரிமாறியும், வைத்த உலைமாறுது எடுக்க எடுக்கக் குறையாத சங்கநிதி பதுமநிதி போல அன்னபானாதி உணவுப்பொருள்கள் வளர்ந்தோங்க மஹா ஜனங்களிடத்து அன்பு செலுத்தினரென்றால் இம்மகா புண்ணிய புருஷரைப் புகழாதார் யாவர் உளர்?

அன்றியும் மாலை 4-மணிக்கு நமது சித்தமூர்த்திகள் அவபிருதஸ்நாநம் செய்து அன்பர் குழாங்களுடன் புதுவைக் கெழுந்தருளுதல் கண்டு தாமும் கூடவே விஜயஞ்செய்து சித்தமூர்த்திகள் ஆச்சிரமத்தில் கொண்டுசேர்த்த அத்தியந்த அன்பிற்குச் சீக்கிரத்திலேயே சற்புத்திரப்பேற்றினைத் திருவருள் பாலிக்கு மென நம்புகிறோம்.

இன்னும் இவ்யாகத்துக்கு வேண்டிய சமஸ்த சாமக்கிரியைகளுமடங்கிய உக்கிராணப்பொறுப்பை வைத்திய மிஸ்டர் இராகவமுதலியாரும் இயன்றவரை பொருளுதவி இருதினங்களுக்கு முன்னமே யாகக்கொட்டாய் முதலான சகல ஏற்பாடுகளும் முட்டின்றிச்செய்து யாகமுடியுமட்டும் சுவாமிகள் நோக்குக் கெதிர் நின்றவர் மிஸ்டர் வேலாயுதநாயக்கரவர்கள், சொக்கலிங்கசெட்டியாரவர்களும் வேள்விக்கு வேண்டும் சமித்து முதலானவற்றைச் சேகரித்துக் கொடுத்தது பொன்னுப்பிள்ளையவர்களும்இதனில் எவ்வளவுதொகை செலவாயினும் தாமே கொடுப்பதென உறுதிசெய்து ஒவ்வொரு பொறுப்பையும் தம்மதேனக்கவனித்தவரும் சுவாமிகள் புதுவையம்பதிக்கு எழுந்தருளுவதெனக் கேட்டபொழுதே ஜாகை முதலியன தயார்செய்து கொடுத்தவருமாகிய பொன்னுறத்நப்பிள்ளையவர்களும், யாகசாலையினுள் அவ்வக்காலங்களில் வேண்டிய சகல திருப்பணியும் உற்சாகத்துடன் இயற்றுந் தர்மம் பூண்டவர் முருகேசசெட்டியாரவர்களும் என்க.

வேதாகம விசுவாச மின்மை, ஈசுவர நிந்தை, குருநிந்தை, பெரியோர்களை மதியாமை முதலிய துஷ்கிருத்தியங்கள் மலிந்த இக்கொடுங்கலியிலும் இக்கலி மஹாராஜன் அரசாக்ஷியினின்றும் ஏதோ பூர்வசுகிருத பரிபாகத்தால் விலகி புண்ணிய புருஷோத்தமப் பிரபுக்களாய் விளங்குவோர் இத்தகைய மஹான்களின் அன்புக்கு ஈடுபட்டு மற்றையோர்க்கும் அன்புவளரச் செய்வாராயின் நமது மதாசாரங்கள் வேருன்றி நிலைபெறுமென்க இனி இத்தகைய பெருந்தகை வள்ளலாகிய சித்தமூர்த்திகளிடத்தில் சாபாஷிக்குஞ் சமயம் சேர்ந்ததெல்லாம் புதுவை வந்தபின்னரே யென்க. பாதித அநுவர்த்தி ரூபமான பேதஞானம் இவரடியில் வந்தவரிடத்திலுமில்லையாமென நதோந்தோம். பார்த்திவசரீர விலக்ஷண ஞன ஜீவன் அத்துடன் கூடியபோது ஜாக்ரம்; சுவப்நம், சுஷுப்தி என்னும் அவஸ்தாத்திரங்களையுமுற்று, விலக்குண்டபோது அம்மூன்றுபாதிகளிலுமிருந்து முக்தனுகிறான் என்னும் ஆப்தவாக்யாதிஷ்டாநத்தில் நின்றும் அகன்றவரிவரே. இவரைப்பற்றி வேறுவகையால் வெளியிட யாம் கருதியிருத்தலின் இங்கு சுருக்கிக்கூறினேம்.

கலித்துறை.

"அருள்வேண்டி னும்வினைக் கட்டற வேண்டினு
மார்ந்தசெல்வப், பொருள்வேண் டினுநற் புகழ்பெற
வேண்டினும் போற்றுசித்தித், தெருள்வேண் டினுமெ
ங்கள் மெய்ஞ்ஞான சித்த சிகாமணிதன், வெருள்வேண்டு
வஞ்சகர்க் கெட்டாத் திருவருள் வேண்டுவரே."

உமாபதிசர்மா.'

---

## "மஹாவிஷஹரணம்

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பதுயாதெனில:— இவ்வுலகத்தில் (சர்ப்பத்தால்) ஜனங்களுக்கு வரும் தீங்கு அதிகமாயிருப்பதால் அத்தீங்கை நிவர்த்திசெய்யக்கூடிய அடியில் கையொப்பமிட்டவருக்கு யாவரும் பாம்பு முதலான விஷஜந்துக்கள் கடித்த உடன் (தந்தி) மூலமாய்க் கடிப்பவரின் ஜாதி, வயது, ஆண் பெண் பெயர் விபரம் இவைகளை அறியப்படுத்த வேண்டியது. தந்தியால் மந்திரத்தைப் பிரயோகித்து உடனே விஷத்தை நிவர்த்திசெய்யப்படும். இதுவுமதவிர சமீபவாசிகளாயுள்ளவர்கள் நேரிலும வந்து நிவர்த்திசெய்து கொள்ளலாம். இதற்கு எவ்விதம பிரதிப்பிரயோஜனமும் அபேக்ஷிக்கப்பட மாட்டாது. எவ்வித விஷமாயிருந்தாலும் உடனே சுகத்தை அடையலாம்.

இங்ஙனம்,
மாயூரம் R. A. சுப்பாசாரியார்
தெற்குமாடவீதி.
திருவிடைமருதூர்".

---

## தெரிவித்துக்கொள்ளுதல்

நமது பத்திரிகாபிமானிகள் தாம் செலுத்த வேண்டிய சந்தாத்தொகையைத் தயவுசெய்திங்கனுப்பித்தரும்படி தெரிவித்துக் கொள்கின்றோம்.

(ப. ர.)

---

"திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ்க"
திருச்சிற்றம்பலம்.

Printed and published by M. Draviam Pillai
Aryaprakasini Press, Tinnevelly Bridge.